கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம் வலசைக்கல் பட்டியில் கட்டப்பட்ட ஏரி.

* வினா எண் 11—திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் ஆத்தூர் வட்டத்தில் கெங்கவல்லி வலசைகல் பட்டி ஏரி கட்டப்பட்டுள்ளதால் நடூர், மால்புளி முதலான சுமார் பதினைந்து ஊர்களுக்குச் செல்லும்வழி தடுக்கப் பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் மாற்று வழித்தடம் அமைக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ), (ஆ). கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம், 74 கிருஷ்ணாபுரம் ஊராட்சி வலசைக்கல் பட்டியில் பொதுப்பணித் துறையினரால் ஏரி கட்டப்பட்ட சமயத்தில் 74 கிருஷ்ணாபுரத்தில் இருந்து நடூர், மால்புளி முதலிய கிராமங்களுக்குச் செல்லும் பாதையில் சுமார் 0.60 கி. மீ. ஏரி அமைப்பில் அடங்கி விட்டது. எனவே மேற்படி பாதைத் தொடர் பாதிக்கப்படாத வகையில் 1.40 கி. மீ. நீளமுள்ள மாற்றுப்பாதை மேற்கண்ட ஏரிக்கு கிழக்கு திசையில் மலை ஓரமாக 1981-82-ல் வறட்சி நிவாரணத் திட்டத்தில் ரூ.7,500/ செலவு செய்து 17-6-81-ல் பணி முடிக்கப்பட்டது. இந்த வினாவிலே குறிப்பிடப்பட்டபடி எந்தவிதமான தடையு எந்த ஊருக்கும் ஏற்படவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசலாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

* வினா எண் 12—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியம் துக்காச்சி கிராமத்திற்கும் நெடுஞ்சாலைக்கும் இடையில் அரசலாற்றில் ஓர் பாலம் கட்ட திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து செலவிட அரசு அனுமதி கோரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது பாலம் அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ,) (ஆ) 1982—83-ம் ஆண்டில் ரூ. 1.00 லட்சம் மதிப்பீட்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இந்தப் பாலம் செயல்படவுள்ளது.

1983 சனவரி 27]

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துக்காச்சி கிராமத்திற்குத் தேவையானது நடைபாலம் அல்ல. தற்போது என்.ஆர்.இ.பி. திட்டத்தின்கீழ் நடைபாலம் தான் போட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து ரூ. 8 இலட்சம் டெப்பாசிட் ஒர்க்காகச் செய்வதற்காக ஊராட்சி ஒன்றியமும் மாவட்ட வளர்ச்சி மன்றமும் தீர்மானத்தை நிறைவேற்றி, மாவட்ட ஆட்சியாளரும் பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். நான் கேட்டிருக்கிற கேள்வி அதை டெப்பாசிட் ஒர்க்காக, ஒன்றியப் பொது நிதியிலிருந்து செய்வதற்கு அரசு அனுமதிக்குமா என்பதுதான் கேள்வி. அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையிலே அந்தப் பாலத்தை எடுத்துக் கொள்வதாகத்தான் திட்டமிடப் பட்டுள்ளது. ஆகவே, இதை டெப்பாசிட் ஒர்க்காக, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பதில்லை. ஆகவே, என். ஆர்.இ.பி. என்று சொல்லக் கூடிய வேலைகளை எல்லாம் இன்று இருக்கக் கூடிய ஒன்றியங்களே செய்யவேண்டுமென்பதுதான் இப்பொழுது இருக்கிற விதிமுறைகள். அந்த விதிமுறைகளுக்கேற்ப ரூ. 1 இலட்சம் செலவிலே என். ஆர். இ. பி. ஒர்க்காக எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது என்.ஆர்.இ.பி. திட்டத்தின்கீழ் நடைபெறுகின்ற அந்தப் பாலம் குமாரமங்கலம் என்ற கிராமத்திற்கு அருகே கட்டப்படுகிறது. துக்காச்சி என்ற கிராமத்தில் ஏறத்தாழ 5,000 மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்குப் போக்கு வரத்து வசதி கிடைக்காமல், கல்வி வசதி, மருத்துவ வசதி பெற முடியாமல் ஆதிவாசிகளைப் போல் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். எனவேதான் போக்குவரத்து வசதி வேண்டுமென்ற அடிப்படையில், அங்கே ஒரு நிரந்தரமான பெரியபாலம் பேருந்துகள் செல்கின்ற அளவுக்கு பாலம் வேண்டுமென்று கேட்டு சர்வகட்சியினரும் உண்ணாவிரதம் இருந்து, மாவட்ட ஆட்சித் தலைவரும் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாலம் வேண்டும் அவ்வளவு தானே? உண்ணாவிரதம் இருந்தார்கள் என்று ஏன் இப்பொழுது சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். பாலத்தை மட்டும் கேளுங்கள்

திரு. செ. இராமலிங்கம் : எனவே, ஒன்றியப் பொது நிதியிலிருந்து ஆர்.ஆர் டிவிஷன் மூலமாக, டெப்பாசிட் ஒர்க்காகச் செய்வதாக மாவட்ட ஆட்சியாளரும் உறுதிமொழி அளித்து, அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். எனவே, ஒன்றியப் பொது நிதியிலிருந்து டெப்பாசிட் ஒர்க்காக.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி நேரம். ஒரு உறுப்பினருக்கே ஒரு பாலம் வேண்டுமென்பதற்காக இவ்வளவு நேரமா? கேட்க வேண்டியயதைச் சுருக்கமாக கேட்கத் தெரியவில்லையே. (குறுக்கீடு) அந்த ஊருக்குப் பாலம் தேவை. ஆதிவாசி மாதிரி இருக்கிறார்கள் என்று சொன்னீர்கள் என்றால், அதிலே பல அர்த்த இருக்கிறது, புரிகிறது. அதற்கு மேல் எதற்கு உண்ணாவிரதம்? மாவட்ட ஆட்சித் தலைவருடைய கட்டளை, அதற்குப் பிறகு மந்திரி வரும்போது கொடுத்த விண்ணப்பம், இவ்வளவுமா கேள்வி நேரத்திலே வரும். கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. செ. இராமலிங்கம்: இந்தக் கேள்வி துக்காச்சி கிராமத்தைப் பற்றியது. அதற்குச் சரியான பதில் கிடைக்கவில்லை. ஆகவேதான், நான் விவரமாகக் கேட்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாலம் தேவை என்பதுதான் கேள்வி. துக்காச்சி கிராமத்திற்குப் பாலம் தேவை என்பது கேள்வி அதைச் செய்கிறாரா இல்லையா என்பதை மட்டும் கேளுங்கள்.

திரு. செ. இராமலிங்கம்: இதுபற்றிய முழு விவரமும் அரசுக்கு வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: விவரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. நான் பதில் சொல்லிவிடுகிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: நான் கேள்வியைச் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினரவர்கள் கேட்ட கேள்வி போதும். அந்தக் கேள்வியின் நோக்கம் எனக்கே புரிகிறது. எனவே, விவாதத்திற்கு நான் அனுமதிக்க மாட்டேன்.

திரு. செ. இராமலிங்கம்: சர்வகட்சியினரும் சம்பந்தப்பட்டிருக்கின்ற பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சர்வ கட்சி என்பதால் முக்கியத்துவம் வந்துவிடாது. மக்களால்தான் அது முக்கியத்துவம் பெறும்.

திரு. செ. இராமலிங்கம்: சரியான விடை கிடைக்காததால் நான் வெளிநடப்பு செய்கிறேன்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1983 சனவரி 27

(திரு. செ. இராமலிங்கம் வெளிநடப்பு செய்தார்)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, அரசலாற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென்று கேட்கப்பட்டதாகும். ஏற்கனவே அரசலாற்றின் குறுக்கே இரண்டு வண்டிகள் செல்லும் அளவிற்கு மிகப் பெரிய பாலம் ஒன்று இருக்கிறது. அதற்குப் பக்கத்திலேயே இன்னொரு பாலம் கட்ட வேண்டுமென்று கேட்டார்கள். அதைத் தான் ஒரு வண்டி, கால்நடைகள் செல்லும் அளவிற்கு வண்டிப் பாலமாக ஒரு இலட்சம் ரூபாயத் திட்டத்தில் கட்டுவதற்கான இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இங்கே மீண்டும் பெரிய பாலம் கட்ட வேண்டுமென்றால், அதற்கான நிதி வசதி நம்மிடத்திலே இல்லை.

நடமாடும் காசநோய் மருத்துவமனைகள்

*வினா எண். 13 திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நடமாடும் காசநோய் மருத்துவமனைகள் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஆம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காசநோயால் பாதிக்கப் படுகின்றவர்களுக்கு நீண்ட நாட்கள் சிகிச்சை அளிக்க வேண்டும். ஆனால் ஓரளவிற்கு அந்த நோய் குணமடைந்ததும் அந்த நோயாளிகள் சிகிச்சையை நிறுத்தி விடுவதால் அவர்களுக்கு மீண்டும் சிகிச்சை அளிக்கும் வகையில் இப்படிப்பட்ட நடமாடும் காசநோய் மருத்துவமனைகளை நிறுவி கிராமங்கள் முழுவதும் சென்று சிகிச்சை அளிப்பதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது 5 மொபைல் மெடிக்கல் யூனிட்டுகள் இருக்கின்றன. தாம்பரத்தில் ஒன்று மிகவும் செம்மையாகச் செயலாற்றிக்கொண்டு வருகிறது. நீண்ட நாட்களாக—ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளாக—செயலாற்றிக்கொண்டு வருகிறது. அது மட்டும் அல்ல, சேலம், பெரியார், மதுரை, திருநெல்வேலி, வடார்க்காடு மாவட்டங்களில் கூட இந்த நடமாடும் மொபைல் யூனிட்டுகள் என்ற நடமாடும் காசநோய் மருத்துவமனைகள் துவக்கிச் செயலாற்ற ஆயத்தமாக இருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாநிலம் முழுவதும் காசநோயால் பாதிக்கப்பட்டிருப்பவர்களின் விவரங்கள் சேகரிப்பட்டிருக்